

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி நேற்று (18.09.2025) கரூர் மாவட்டம், குளித்தலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் (குளித்தலை) மற்றும் குளித்தலை சார் ஆட்சியர் திருமதி. தி.சுவாதி ஆகியோர் உள்ளனர்.



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் மயிலம் பொறியியல் கல்லூரி கூட்டரங்கில் பள்ளி கல்வித்துறை சார்பில் பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு – 2025 (SLAS) குறித்த ஆய்வுக் கூட்டத்தில் தொடர்சியாக நூறு சதவீதம் தேர்ச்சி வழங்கிய பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை நேற்று முன்தினம் (18.09.2025) வழங்கினார். உடன் இயக்குநர் தொடக்கக்கல்வி இயக்கம் பூ.ஆ.நரேஷ், முதல்வர் மாவட்ட ஆசிரியர் மற்றும் பயிற்சி நிறுவனம் முனைவர் ப.ராமலிங்கம், முதன்மை கல்வி அலுவலர் ரெ.அறிவழகன், மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) சி.சிவசுப்பிரமணியன், இயக்குநர் மயிலம் பொறியியல் கல்லூரி செந்தில்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# எதிரிகள் யாராக இருந்தாலும் வெற்றி நமக்குத்தான்!

## கரூர் – கழக முப்பெரும் விழாவில் – மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி சூளுரை!

கரூர், செப். 20 -

எதிரிகள் யாராக இருந்தாலும் எந்த வடிவில் வந்தாலும் வெற்றி நமக்குத் தான் என கரூரில் நடைபெற்ற கழக பிரமாண்ட முப்பெரும் விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி வரவேற்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கரூர் கோடங்கிபட்டி கலைஞர் அரங்கில் கழக முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவில் கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வரவேற்று உரையாற்றினார். அவர் பேசியதாவது:-



திராவிட சூரியனான கழகத் தலைவரும், முதலமைச்சருமான தங்களை அன்புடன் வரவேற்கின்றேன். உங்களின் வியூகம் என்னவென்று தெரியாமல் எதிரிகள் விழி பிதுங்கி நிற்கின்றார்கள். உங்களுக்கு என்றும் நன்றிக்கு உரியவனாகவும், நன்றி மாறாதவனாகவும் இருப்பேன்.

புன்னகையினால் அரவணைத்துக் கொண்டிருக்கின்ற, புன்னகையினால் எதிரிகளை ஓட ஓட விரட்டும் இளைய சூரியனே வரவேற்கின்றோம். அனைத்து நிர்வாகிகள் தொண்டர்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

2026 தேர்தல் வெற்றி கணக்கை இங்கிருந்தே தொடங்குவோம். எதிரிகள் யாராக இருந்தாலும் எந்த வடிவில் வந்தாலும் வெற்றி நமக்குத்தான். நாம தான் ஜெயிக்கிறோம். நாம மட்டும் தான் ஜெயிக்கிறோம். வெல்வோம் 200. படைப்போம் வரலாறு.

இவ்வாறு அவர் பேசினார்.

## சின்னத்திரை – வண்ணத்திரை மூலம்

# தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர் ரோபோ சங்கர்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!



சென்னை, செப். 19-

சின்னத்திரை - வண்ணத்திரை மூலம் தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர் ரோபோ சங்கர் என்று அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வெளியிட்டுள்ள செய்தியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திரைக்கலைஞர் ரோபோ சங்கர் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

**திரைக்கலைஞர் ரோபோ சங்கர் அவர்கள் மறைவெய்திய செய்தி அறிந்து வருந்துகிறேன். மேடைகளில் துவங்கி, சின்னத்திரை - வண்ணத்திரை என விரிந்து, தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர் ரோபோ சங்கர். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் - கலையுலகினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## சேலம் மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றம்!

# 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வென்றிட உறுதியேற்போம்!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. சிறப்புரை!

சேலம், செப். 20 –

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், 12.09.2025ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி அளவில் எடப்பாடியில் உள்ள ஸ்ரீ நடராஜா திருமண மண்டபத்தில் சேலம் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ப.தங்கமுத்து தலைமையில், முன்னாள் அமைச்சர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினரும், சேலம் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி சிறப்புரையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் சேலம் மேற்கு மாவட்ட கழக செயற்குழு உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**சபரீசன் தந்தை வேதமூர்த்தி அவர்களின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சம்பந்தியும், மரியாதைக்குரிய சபரீசன் தந்தையுமான வேதமூர்த்தி அவர்களின் மறைவு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். அன்னாரது மறைவிற்கு சேலம் மேற்கு மாவட்ட கழகம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

**கழகத்தலைவர் வெளிநாட்டு பயண வெற்றிக்கு வாழ்த்துகளும், பாராட்டுகளும்!**

முதல்வர் அவர்கள் கழகத்தலைவராக பொறுப்பேற்று வெற்றிகரமாக ஏழு ஆண்டுகளை நிறைவு செய்து எட்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றார்கள். முதல்வராக பொறுப்பேற்று 4 ¾ ஆண்டுகளாக ஆட்சியில் செயற்கரிய மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை தீட்டி திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். கழகத்தலைவர் அவர்கள் முதல்வராக 2021ஆம் ஆண்டு முதல் கடந்த ஆண்டுவரை 922 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 10.63 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வெளிநாட்டு முதலீடுகள் பெற்று தந்து அதன் மூலம் 32.81 இலட்சம் தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்தவர். ஒரு வார அரசு முறை பயணமாக ஜெர்மன் மற்றும் இங்கிலாந்து சென்று 15,516 கோடி முதலீட்டை பெற்று அதன் மூலம் 17613 நபர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்தவர். தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இது வரை 10,78,516 கோடி அந்நிய முதலீட்டை பெற்று 32 இலட்சம் தமிழ்நாடு மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளார்கள். தமிழ் மண், மானம் காத்திட அயராது உழைத்து வெகுவாக அந்நிய முதலீட்டை ஈட்டி தாயகம் திரும்பிய முதர்வர் அவர்களுக்கு சேலம் மேற்கு மாவட்ட செயற்குழு தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

**கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம் வருவது குறித்து**

இளைஞர்களின் எழுச்சி நாயகன், எதிர்கால தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், கடந்த 2021 சட்டமன்ற தேர்தல் மற்றும் 2024ல் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் கழகம் வெற்றி பெற அயராது உழைத்த தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 2026ல் கழகம் 2.0 வெற்றிப்பெற்று மீண்டும் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைத்திட தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்று பயணம் தொடங்கிவிட்டார். துணை முதல்வர் அவர்கள் வருகின்ற செப்டம்பர் 16ந் தேதி அரசு நிகழ்ச்சிக்காக மாங்கனி நகரமாம் சேலத்திற்கு வருகை தர உள்ளார். செப்டம்பர் 16ந் தேதி சேலம் வருகை தரும் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு சேலம் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிப்பதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**செப் 15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் ஓரணியில் தமிழ்நாடு - வாக்குச்சாவடி அளவிலான உறுதிமொழி முன்மொழிவுக் கூட்டங்கள்!**

கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் செப்டெம்பர் 9 அன்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் முடிவெடுக்கப்படி, செப்டம்பர் 15 அன்று பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று தமிழ்நாடு முழுவதுமுள்ள 68,000 வாக்குச்சாவடிகளிலும் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள் கூடி, மண் மொழிமானம் காப்பதற்கான உறுதிமொழியை முன்மொழிய வேண்டும்.

★ ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பள்ளி மைதானங்கள், சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்களில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப் பில் இணைந்த குடும்பங்களை அழைத்து நிகழ்ச்சி நடத்திட வேண்டும்.

★ என் வாக்குச்சாவடி, வலிமையான வாக்குச்சாவடி' என்பதை உணர்த்திடும் வகையில் அந்தந்த வாக்குசாவடிக்குட்பட்ட மாநிலமாவட்ட ஒன்றியநகரபேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணியினர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

★ BDA, BLC ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் என குறைந்தபட்சம் 100 நபர்களாவது இக்கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும்.

நிகழ்ச்சியின் நிழற்படங்கள் . காட்சிப்படங்களை BDA க்கள் வாட்ஸப் குழுக்களில் பதிவிட வேண்டும். அதேபோல செயலியில் பதிவேற்ற வேண்டும். தகவல் தொழில்நுட்ப அணி இப்பணியை ஒருங்கிணைக்க வேண்டும்.

★ ஒவ்வொரு கூட்டத்திலும் உறுதிமொழி முன்மொழியப்பட வேண்டும். உறுதி மொழி ஏற்பினை BDA கள் புகைப்படம், வீடியோ எடுத்து தலைமைக்கு அனுப்பி வைத்திட வேண்டும்.

★ காலை 9 மணிக்கு பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளைக் கொண்டாடி உறுதிமொழியை முன்மொழிவது சிறப்பு; திங்கட்கிழமை என்பதால் மாலை வேளையில் நடத்தினால் சிறப்பாக இருக்கும் எனக் கருதும் வாக்குசாவடிகளில் மாற்றி நடத்திக் கொள்ளலாம்.

★ சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட எடப்பாடி தொகுதி – 325 பூத், மேட்டூர் தொகுதி – 316 பூத், சங்ககிரி தொகுதி – 315 பூத் ஆகிய அனைத்து வாக்குச்சாவடிகளிலும் செப்டம்பர் 15 அன்று உறுதிமொழி முன்மொழிவதை உறுதி செய்திட வேண்டும்.

**உறுதிமொழி:**

**தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்!**

ஓரணியில் தமிழ்நாடு குடும்பத்தில் இணைந்துள்ள 1 கோடிக் குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்து, ”தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்! என உறுதி ஏற்கிறோம்!

★ நான், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதா சாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன்; தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

★ நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் SIRக்கு எதிராக நிற்பேன்; தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

★ நான், நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு உரிய கல்வி நிதிக்காகப் போராடுவேன்; ஒருபோதும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

★ நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு (நன்மதிப்பிற்கு) எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடு வேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

நான், ‘பெண்கள் விவசாயிகள் மீனவர்கள் நெசவாளர்கள் ★ தொழிலாளர்கள்’ என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட் டேன் என உறுதி ஏற்கிறேன்.

**கழக ஆக்கப்பணிகள்!**

கழகத்தலைவர், முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று தனது கடின உழைப்பால் அறிவார்ந்த திட்டங்களை தீட்டி செயல்படுத்தி தமிழ்நாட்டை இந்திய ஒன்றியத்திலுள்ள மாநிலங்களில் வளர்ச்சி மிக்க முதல் மாநிலமாக உயர்த்தியுள்ளார்கள்.

திட்டங்களை செயல்படுத்தி இத்தகைய மக்கள் நலத்திட்டங்கள் சென்றடையாத குடும்பங்களே தமிழ்நாட்டில் இல்லை என்ற அளவுக்கு திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறார். இத்தகைய திட்டங்கள் தொடர தமிழர் தம் மண், மொழி, மானம் காத்திட வருகின்ற 2026ல் நடைபெற உள்ள **தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகளை வென்றிட** நமது சேலம் மேற்கு மாவட்டத்திலுள்ள சங்ககிரி, எடப்பாடி, மேட்டூர் சட்டமன்ற தொகுதிகளில் அதிக வாக்குகள் பெற்று கழகம் வெற்றிபெற்று அந்த வெற்றிக்கனியை நாம் அனைவரும் கழக தலைவர் தளபதியார் மற்றும் தமிழ்நாடு துணை முதல்வர் ஆகியோரது பொற்கரங்களில் ஒப்படைக்க உழைப்போம் என உறுதியேற்போம் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஜெர்மனி – இங்கிலாந்து நாடுகளுக்குச் சென்று 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம்

# 15,516 கோடி ரூபாய் புதிய முதலீடுகளை ஈர்த்த முதல்வருக்கு நன்றி!

## திருப்பூர் கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில்!

*திருப்பூர், செப். 20 -*

*திருப்பூர் கிழக்கு மற்றும் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 09.09.2025 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 05.00 மணியளவில் திருப்பூர் தாராபுரம் சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகமான “கலைஞர் அறிவாலயம்” “தளபதி அரங்கில்” தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

*இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :*

*தீர்மானம் 1 : ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசுமுறை பயணமாக கடந்த ஆகஸ்டு 30 நாள் சென்று 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 15,516 கோடி புதிய தொழில் முதலீடுகளை ஈர்த்தும். 17,613 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கி, தமிழகத்தினை முதன் மாநிலமாக உருவாக்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கு திருப்பூர் கிழக்கு மற்றும் தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பாராட்டி நன்றி தெரிவித்து கொள்ளப்படுகிறது.*

*தீர்மானம் 2 : “ஓரணியில் தமிழ்நாடு” புதிய உறுப்பினர் சேர்க்கையை விரைந்து முடித்து கழகம் நிர்ணயித்த 40% சதவீத இலக்கை எட்டியதோடு மட்டுமில்லாமல் மேலும் உறுப்பினர்கள் சேர்த்து கொண்டு, மாவட்ட கழகத்திற்கு பெருமை சேர்த்து வரும் நிர்வாகிகளுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக எண்ணற்ற மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து கொள்ளப்படுகிறது. மேலும், 40% சதவீத்திற்கு குறைவான உறுப்பினர் சேர்க்கையுடைய பாகங்களை விரைவாக முடிப்பதோடு மட்டுமின்றி, குறைந்தபட்சம் ஒரு நபருக்கு ஒரு தொலைபேசி எண் வாங்கியும், அதிகமான உறுப்பினர்களை சேர்க்கவும், 100 நபர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர் நியமனம் சரிபார்த்தும் திருப்பூர் கிழக்கு மற்றும் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும் ஒருங்கிணைந்து செயலாற்றிட வேண்டுமென இக்கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.*

*தீர்மானம் 3 : கழகத் தலைவர், நலத்திட்ட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டம், உடுமலைப் பேட்டை வருகை புரிந்து, நேதாஜி மைதானத்தில் திருப்பூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, சுமார் 35,000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், பொள்ளாச்சியில், பி.ஏ.பி. பாசன திட்டம் (கொங்கு மண்டலத்தில் சுமார் 4 இலட்சம் ஏக்கர் பயன் பெறும் வகையில் பி.ஏ.பி. பாசனத்திட்டம்) அமைய காரணமானவர்களான திருவாளர்கள் பெருந்தலைவர் கு.காம ராஜர், சி.சுப்பிரமணியம், வி.கே.பழனிச்சாமி கவுண்டர், பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோர்களின் முழு திருவுருவச் சிலைகளை திறந்து வைத்தும், அதுசம்மந்தப்பட்ட வரலாற்று நினைவு புகைப்படங்களையும் பார்வையிட்டார். பிஏபி திட்டப்பணி நடைபெற்ற போது ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்த தொழிலாளர்களுக்கு ஆழியாரில் அமைந்துள்ள நினைவரங்கத்தை திறந்த வைத்து நிகழ்ச்சியை சிறப்பித்து மேற்கு மண்டல மக்களிடத்து அன்பையும், பாசத்தையும் பெற்ற நலத்திட்ட நாயகருக்கு திருப்பூர் கிழக்கு மற்றும் தெற்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கூட்டத்தின் வாயிலாக நன்றி தெரிவித்து கொள்ளப்படுகிறது.*

*தீர்மானம் 4 : அமெரிக்க அரசின் 50% வரிவிதிப்பால் கடும் பாதிப்பிற்குள்ளாகி உள்ள திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களைக் கண்டுகொள்ளாமல் கைவிட்ட ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எதிராக மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்த பொதுமக்கள், தி.மு.கழக நிர்வாகிகள், செயல் வீரர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தோழர்களுக்கும், மற்றும் தொழில்துறை சார்ந்தவர்களுக்கும் திருப்பூர் கிழக்கு மற்றும் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக கூட்டத்தின் வாயிலாக நன்றி தெரிவித்துக்கொள்வதோடு மேற்கண்ட பிரச்சனைகளை மாண்புமிகு தமிழ்நாடு அரசின் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய வழியில் ஒன்றிய அரசை வழியுரித்தி அமெரிக்க டிரம்ப் அரசு அறிவித்துள்ள இந்திய பொருள்களுக்கான 50% வரி விதிப்பால் பாதிக்கப்பட்ட அனைத்து தொழித்துறையினருக்கு ஒன்றிய அரசு மூலம் நிவாரணம் வழங்கிட வேண்டுமென பிரதமரை வழியுரித்தி இக்கூட்டத்தின் வாயிலாக வேண்டி கேட்டுக்கொள்ளப்படுகிறது.*

*இவ்வாறு கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானி க்கப் பட்டது.*



நீலகிரி மாவட்டம் உதகை நகராட்சி காந்தல் பகுதியில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அரசு நகராட்சி உருது உயர்நிலைப்பள்ளியில் 9 ஆம் வகுப்பு சேர்க்கை மாணவிகளுக்கு புத்தகங்களை வழங்கினார். உடன், அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, உதகை சட்டமன்ற உறுப்பினர்ஆர்.கணேஷ் ஆகியோர் உள்ளனர்.



சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டலம் வார்டு 35, 37 பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு திரு.வி.க.ரோடு செங்குந்தர் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் (18.09.2025) நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் வழங்கிய மனுவின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி ஆகியோர் வழங்கினார்கள்.